# 3ம் கட்ட இலவச நிவாரணம்; காலஎல்லை நீடிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இடம் பெயர்ந்தோருக்கான 3-ம் கட்ட இலவச உலர் உணவு விநியோகம், தொழில் இழந்தோருக்கான 2ம் கட்ட இலவச உலர் உணவு விநியோகம், 1500 ரூபாவுக்கு மேற்பட்ட வருமானம் பெறுவோருக்கான 2ம் கட்ட பணத்துக்கான உலர் உணவு விநியோகம் ஆகியவை வழங்கும் கால எல்லை மேலும் நவம்பர் மாதம் 4ம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் தலைமையில் நேற்றுக் காலை யாழ். செயலகத்தில்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 3-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 | ஐப்பசி 10 | ற. ஆகிர் பிறை: 7 | இதழ்: 185

யாழ்ப்பாணம் | சனிக்கிழமை | 27-10-1990

## புலிகளின் மிதிவெடியில் சிக்கி பல இராணுவம் காயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து சிலாவத்தையை நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினரை எதிர்த்து விடுதலைப் புலிகள் தாக்கியதில் படையினர் பின்வாங்கி முகாமுக்கு சென்றனர்.

பின்வாங்கிச்சென்ற படையினர் விடுதலைப்புலிகள் புதைத்து வைத்திருந்த மிதிவெடிகளில் சிக்கியதில் பல இரா

[4-ம் பக்கம் பார்க்க]

# பாதிக்கப்பட்ட வறியமக்களுக்கு நிவாரணம்:

# வீடுபுனரமைக்கஐயாயிரம்ரூபா

# தொழில் மீளமைக்க ரூபா 1000

## புனரமைப்பு புனர்வாழ்வு அமைச்சு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பாதிக்கப்பட்ட வறிய மக்களுக்கு உடன் நிவாரணம் வழங்குமாறு புனரமைப்பு புனர்வாழ்வு அமைச்சு அறிவித்துள்ளது. இதன்படி வீடுகளை இழந்தோருக்கு 5,000 ரூபாவும் தொழில்களை இழந்தோருக்கு 1000 ரூபாவும், வீட்டுத்தளபாடங்களுக்கு 500 ரூபாவும் வழங்கப்படும்.**

பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண வறியமக்களுக்கு உடன் நிவாரணம் வழங்கும்படி புனரமைப்பு புனர்வாழ்வு அமைச்சு சுற்று நிருபம் ஒன்றை சகல அரசாங்க அதிபர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளது.

புனரமைப்பு – புனர்வாழ்வு அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளர் திரு. தம்பையா லங்காநேசனால் அனுப்பப்பட்ட மேற்படி சுற்று நிருபத்தின்படி வடக்கு - கிழக்கு மாகாணத்தில்பாதிக்கப்பட்ட வறிய மக்களுக்குகீழ்க்காணும் பிரசாரம் நிவாரணங்களை உடன் வழங்கும்படி பணிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்கால பாதிப்புக்களின்போது மரணமான ஒவ்வொருவரின் மரணச்சடங்கு செலவுக்கு இரண்டாயிரம் ரூபாவும், வீடுகளை இழந்தோருக்கு புனரமைப்புச் செய்வதற்கு ஐயாயிரம் ரூபாவும் தொழில் மீளமைப்பு செய்வதற்கு ஆயிரம் ரூபாவும் வீட்டுத்தளபாடங்களை செப்பனிடுவதற்கு ஐநூறு ரூபாவும்

(4ம் பக்கம் பார்க்க)

## நீலகிரியில்: பெரு வெள்ளத்துக்கு 44 பேர் பலியாகினர்

### 35 பேரைக் காணவில்லை

(சென்னை)

நீலகிரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட பெரும் வெள்ளப் பெருக்கில் 44 பேர் நீரில் மூழ்கி இறந்துள்ளனர். 35 பேர் காணாமல் போய் விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் 21 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. 23 சடலங்களைத் தேடிக்கண்டெடுக்கும் பணி தொடர்ந்து நடை பெறுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

## புளியங்கூடலில் பாதுகாப்பு பாதணியுடன் துண்டிக்கப்பட்ட கால்

(வேலணை)

மிதிவெடி ஆபத்திலிருந்து இராணுவத்தினரை பாதுகாக்கும் விசேட பாதணியுடன் துண்டிக்கப்பட்ட கால் ஒன்று புளியங்கூடலில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.

விசேட பாதுகாப்புக்கு என வழங்கப்பட்டிருந்த படையினர் ஒருவர் விடுதலைப் புலிகளால் புதைத்து வைக்கப்பட்ட மிதிவெடியில் சிக்கி தனது காலை இழந்திருக்க வேண்டுமென்று அறியப்படுகிறது. (அ)

## 6 கோடி 40 லட்சம் கடனுகை வழங்க முடிவு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியம் ஆறுகோடியே நாற்பது லட்சம் ரூபாவைக் இலங்கைக்கு கடனுகை வழங்குவதற்கு முடிவு செய்துள்ளது.

கடந்த இரு ஆண்டுகளில் 16 கோடி ரூபா இலங்கைக்கு கடனுகை வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (து)

## தென்னிலங்கையில் 10,000 சிங்கள இளைஞர்கள் முகாம்களில் தடுத்துவைப்பு!

(கொழும்பு)

தென்னிலங்கையில் பத்தாயிரம் சிங்கள இளைஞர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

ஜே. வி. பி. உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள்.

தென்னிலங்கையிலுள்ள பல் வேறு இராணுவ முகாம்களில் இவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள். (து)

## பண்ணை தாம்போதி வீதி விரைவில் திறக்கப்படும்

(புங்குடுதீவு)

கடந்த பல மாதங்களாக தடைப்பட்டிருந்த யாழ். பண்ணை தாம்போதி வீதி மீண்டும் திறந்துவிடப்படுவதற்கான நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வீதியில் புதைத்துவைக்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஊர்காவல் படையில் ஒருவர் பலி

(திருமலை)

திருமலை பகுதியிலுள்ள பதவியா 7ம் கட்டையடியில் விடுதலைப் புலிகள் ஊர்காவல் படையினர் மீது நடத்திய தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. (வி)

## வளைகுடாவிற்கு ஒருலட்சம் படைகளை மேலும் அனுப்ப அமெரிக்கா முடிவு!

(நியூயோர்க்)

வளைகுடாவிற்கு மேலும் ஒரு லட்சம் துருப்புக்களை அனுப்பிவைப்பதற்கு அமெரிக்கா முடிவுசெய்துள்ளது.

ஈராக், குவைத்தில் மேலும் பிரச்சனைகள் அதிகரித்துவருவதாலேயே மேலும் துருப்புகள் அனுப்பப்படுவதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது.

வளைகுடாவில் 2 லட்சத்து இருபத்தையாயிரம் அமெரிக்கத் துருப்புகள் ஏற்கனவே இருப்பது குறிப்பிடத்தக்கது.

## விடுதலைப் புலிகள் நடத்தும் இலவச பாடசாலைகள்

(மாங்குளம்)

கிளிநொச்சியில் புலிகளின் ஆதரவுடன் இலவச பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(4-ம் பக்கம் பார்க்க)

# பத்து மணி நேரம் காத்திருந்தும்

# இலவச நிவாரணம் கிடைக்கவில்லை!

'இலவச நிவாரணம்' பெறுவதற்கு மக்கள் தினமும் அவஸ்தைப்பட்டு வருகிறார்கள்.

அதிகாலை ஒரு மணிக்கே பங்கீட்டு உணவு வழங்கப்படும் ப. நோ. கூ. ச. கிளைக் கடைகளின் முன்பாக மக்கள் கூட்டம் நிறைந்து வழிவதை தினமும் காணமுடிகிறது.

நித்திரையின்றி கொட்டும் மழையையும், குளிரையும் பொருட்படுத்தாது இருட்டில் பாதுகாப்பற்ற நிலையில், நடு

1-ம் கட்டம் 2-ம் கட்டம் முடிந்து 3-ம் கட்ட நிவாரணம் பெறுகையில் கூட தொடர்ந்து தொல்லைகளை அனுபவித்து வருகிறார்கள். இந்தக் காட்சிகளை தினமும் காணமுடிகிறது.

## இரவிலும் விநியோகம்

இக்கட்டான இக்கால கட்டத்தில் மக்கள் படும் வேதனைகளையும் கஷ்டங்களையும் மனதில் உணர்ந்து சேவை மனப்

## இலவச நிவாரணமும் மக்கள் படும்பாடும்

நிசிவேளையில் சிறுவர்களும் வயோதிபர்களும் இளம்பெண்களும் தாய்மார்களும் கூட, இலக்க சீட்டுக்களை பெறுவதற்காக கடைகளின் முன்பாக தவம் கிடக்கின்றார்கள்.

### கிளைக் கடைகளில்

ஊரடங்குச் சட்டம், பேய் மழை, விமானத் தாக்குதல், ஷெல் அடி, இத்தனை ஆபத்திற்கும் மத்தியில் நித்திரையின்றி, சங்கக் கிளைக் கடைகளின் முன்னால் தவியாய் தவிக்கிறார்கள்.

சில இடங்களில் பத்து மணிக்கு மேலாக கியூவில் நின்று இலக்க சீட்டு கிடைக்காமல் ஏமாற்றத்துடன் திரும்புகின்றார்கள். மறுநாளும் அவர்களுக்கு அதேகதிதான்.

### இடம்பெயர்ந்த மக்கள்

இடம்பெயர்ந்து தூரஇடங்களில் தஞ்சமடைந்திருக்கும் குடும்பங்கள் இலவச நிவாரணம் பெற அதிகாலை வந்து கியூவில் நிற்கமுடியாமல் முதல்நாளே வந்து. அறிந்தவர், தெரிந்தவர் வீட்டில் தங்கி, நள்ளிரவு சங்க கிளைகளுக்கு வந்து இலக்க சீட்டுப் பெற தவம் கிடக்கிறார்கள்.

பான்மையோடு பல ப. நோ. கூ. ச. கிளை ஊழியர்கள் முன்கூட்டியே காலை 7-00 மணிக்கு கடைகளைத் திறந்து வேகமாகவும் அன்பாகவும் வார்த்தைகளையும் கூறி மக்களை சாந்தப்படுத்தி, எதுவித முகச்சுழிப்புமின்றி உணவுப் பொருட்களை சரியான நிறையுடன் வழங்கியும் வருகின்றார்கள். சில கிளைக் கடைகளில் இரவு 8-00 மணிவரை லாம்பு வெளிச்சத்தில்கூட நிவாரணம் வழங்கினார்கள்.

சில கடைகளில் முகாமையாளர்கள் காலை 10-00 மணி அளவிலேயே வந்து கடைகளைத் திறக்கின்றார்கள். நீண்டநேரம் காத்திருந்த மக்கள், கிளை முகாமையாளரின் வருகையை பார்த்தவுடன் உஷார் அடையும்போது ''ஏன் அவதிப்படுகிறீர்கள், சில சில்லறைச் சாமான்கள் இல்லை, இனித்தான் சங்கத்திற்குப் போய், சமான்கள் எடுத்து வரவேண்டும்'' என்பார்கள். மக்கள் வேறு வழியின்றித் தொடர்ந்து காத்திருப்பார்கள்.

குறிப்பிட்ட தினத்தில் இலவச உணவு வழங்கப்படும் என்று முன்கூட்டியே கிளை வாசலில் அறிவித்தல் தொங்க விடுவார்கள். அன்று அதிகாலை மக்கள் அக்கிளைக்குச் சென்றால் முதல் நாள் இருந்த அறிவித்தலுக்குப் பதிலாக மற்றொரு அறிவித்தல் இருக்கும்.

'இன்று நிவாரணம் வழங்கப்படமாட்டாது' என்று அதில் எழுதப்பட்டிருக்கும். ஏமாற்றத்துடன் மக்கள் திரும்பிச் செல்வார்கள்.

சில இடங்களில் 3ம் கட்ட நிவாரணம் வழங்கும் வேலை முடிவு பெறவில்லை.

சில முகாமையாளர் வதிவிடம், சங்கக் கிளையிருக்கும் இடத்திலிருந்து பல மைல் தூரத்தில் இருக்கும். சில ஊழியர்கள் இடம்பெயர்ந்து வேறிடம் சென்றிருப்பார்கள். இவர்கள் காலையில் வந்து சேரத் தாமதமாகிறது. அவர் வந்த பின் தான் இலக்கச் சீட்டு வழங்கப்படுகிறது. இதில் மாற்றம் செய்து, மக்கள் குறை தீர்க்கமுடியாதா?

- தேவா -

## 3-ம் கட்ட நிவாரணம் சில இடங்களில் வழங்கப்படவில்லை!

கடந்த 22ம் திகதி 'நிவாரணம் வழங்கப்படும்' என்று ஒரு சங்கத்தின் கிளைக் கடையில் அறிவித்தல் போடப்பட்டிருந்தது. அதிகாலை 1-00 மணியிலிருந்து பலர் வந்தார்கள்: சிலர், பாய்படுக்கை, தலையணைகளுடன் வந்தார்கள். சரியான பேய் மழை; சிறுவர்கள், தாய்மார்கள் மழையில் நனைந்துவிட்டார்கள். இதனைப் பார்த்துப் பரிதாபப்பட்ட, அந்தக் கிளைக்கு அருகில் வசிப்பவர், தமது வீட்டில் அவர்களைத் தங்க அனுமதித்தார். சுமார் 40 பேர் வரை அந்த நள்ளிரவில் அவ் வீட்டு விறாந்தையில் படுத்தார்கள். அதிகாலை 1-00 மணி முதல் காலை 10-00 மணிவரை 'கியூ'வில் நின்றார்கள், சிறுவர்கள், பெரியவர்கள், தாய்மார்கள் இப்படிப் பலர். காலை 10-30 மணிக்கு அவர்களின் இலவச நிவாரணம் வேறு கிளைக்கு மாற்றப்பட்டதாக அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. பலர் ஆத்திரப்பட்டார்கள்; ஆவேசப்பட்டார்கள். பின் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றார்கள்.

இந்த நிலைமை 4வது நிவாரணத்தின்போது மீண்டும் ஏற்படாமல் தவிர்க்கமுடியாதா?

### மற்றொரு சம்பவம்

கடந்த மாதம் நடந்த மற்றொரு சம்பவம் ஞாபகமிருக்கிறது. ஒருவர் 2ம் கட்ட இலவச நிவாரணம் பெற அந்தக் கிளைக் கடைக்கு அதிகாலை சென்றார். காலை 8-00 மணியளவில் அவருக்கு 13ம் இலக்கச் சீட்டுக் கிடைத்தது. பின் அவர் உணவுப் பொருள்கள் பெறக் காலை 11-00 மணி வரை காத்திருந்தார். அவரின் தருணம் வந்ததும் அவர் முகாமையாரிடம் சென்றபோது முகாமையாளர், இலக்கச் சீட்டை வாங்கிப் பார்த்துவிட்டு பட்டியலில் அவரின் பெயர் இல்லையென்றும், தலைமைச் சங்கம் இரண்டாவது பட்டியலை அனுப்பத் தாமதித்துவிட்டதென்றும், கிளைக்கு அப்பட்டியல் வரவில்லை என்றும் கூறித் திருப்பி அனுப்பிவிட்டார்; அடுத்த வாரம் மீண்டும் ஒரு முறை வந்தபோது, 2ம் கட்டப் பங்கீட்டுப் பொருளில் ஒருபகுதி மட்டுமே வழங்கப்பட்டது. மிகுதிக்கு அடுத்த வாரம் வருமாறு தெரிவிக்கப்பட்டது. இதனால் 3 இரவும், பகலும் அவர் அலைய நேரிட்டது.

இந்தக் குறைபாடுகளைத் நீக்கி, மக்கள் கஷ்டமின்றி நிவாரணம் பெற வழிசெய்ய முடியாதா?

உணவுப் பொருட்களை கட்டம் கட்டமாக குறிப்பிட்ட திகதிகளில் கொடுத்து முடித்துவிடவேண்டும் என்ற எண்ணம் கொண்ட கிளை முகாமையாளர்களும், பொறுப்பாளர்களும் உண்டு.

இலவச நிவாரணம் ஒரு கிளையிலிருந்து மற்றொரு கிளைக்கு மாற்றப்பட்டிருந்தால் அதனை மக்களுக்கு முன்கூட்டியே அறிவிப்பது அவர்கள் வந்து இரவிரவாக கியூவில் நின்று கஷ்டப்படுவதை தவிர்க்கலாம்.

உணவுப் பொருட்கள் கிளைகளுக்கு வந்து சேராவிடில் முதல்நாளே அத்தகவலை அறிவித்தல் மூலம் தெரிவித்தால் மக்கள் கியூவில் நிற்கும் கஷ்டத்தைக் குறைக்கலாம்.

3-ம் கட்ட நிவாரணம் வழங்குவதற்கு நேற்றுத்தான் இறுதி நாள் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இன்னும் சில இடங்களில் 3-ம் கட்ட இலவச நிவாரணம் வழங்கும் வேலைகள் பூர்த்தியாகவில்லை.

இதேவேளையில் 4-ம் கட்ட உணவு விநியோகம் பற்றி ஆலோசிக்கப்பட்டுவருகிறது. 1-ம், 2-ம், 3-ம் கட்ட விநியோகத்தின்போது மக்கள் பட்ட கஷ்டங்களைப் போக்கி 4-வது கட்ட உணவுப்பொருட்களை உரிய காலத்தில் தாமதமின்றி மக்கள் பெற்றுக்கொள்வதற்கு வழிவகை செய்யப்படுமென மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

# வன்முறை சம்பவங்களினால் 2000 பஸ்கள் சேதம்

## 600 முற்றாக நாசம்

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபையை இலாபத்தில் இயங்க வைப்பதானால் அதனை மக்கள் மயப்படுத்தும் திட்டம் ஒன்றினாலேதான் முடியுமென ஊழியர்கள் பேச்சுவார்த்தைகளின் பின் உணர்ந்துள்ளனர். இத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு அரசுக்கு ஆயிரத்து இருநூறு கோடி ரூபா தேவைப்படுகிறது.

பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சர் விஜயபால மெண்டிஸ் இத்தகவலை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் 'இலங்கைப் போக்குவரத்துச் சபையில் 52,000 ஊழியர்கள் பணியாற்றுகின்றார்கள். சபையிடம் 3,500 பஸ்களே உள்ளன. ஒரு பஸ்ஸுக்கு 13 ஊழியர்கள் என்ற அடிப்படையில் உள்ளனர். வன்முறைச் சம்பவங்களினால் 2000 பஸ்கள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் 600 பஸ்கள் பயன்படுத்தமுடியாமல் உள்ளன.

போக்குவரத்துச்சபை ஊழியர்கள் தமது விருப்பப்படி சேவையிலிருந்து விலகலாம் எனசபை அறிவித்தலுக்கமைவாக 600 ஊழியர்கள் சேவையிலிருந்து விலகச்சம்மதித்துள்ளனர். இதனால் அவர்களுக்கு சேவைக்காலப் பணம் வழங்க 170 கோடி ரூபாய் தேவைப்படுகிறது.

போக்குவரத்துச் சபையை மக்கள் மயப்படுத்தும் திட்டத்தைச் செயல்படுத்த உலக வங்கி 400 கோடி ரூபாவை வழங்குகின்றது. சபையில் பணி புரியும் ஊழியர்களின் சேமலாபநிதி இதுவரை சபையால் செலுத்தப்படவில்லை. இதற்கு நூற்றிஇருபது கோடி ரூபா தேவைப்படுகிறது. போக்குவரத்துச் சபையை மக்கள் மயப்படுத்தும் திட்டத்தினால் பாடசாலை மாணவர்களுக்கான சேவையையும், மாணவர்களுக்கானபருவகால பயணச் சீட்டும் வழமைபோல் வழங்கப்படும்

கடந்தகாலங்களில் போக்குவரத்துச்சபைக்கு திறைசேரி மானியம் வழங்கிவருகின்றது. இனியும் தொடர்ந்து வழங்கப்படுமெனத் தெரிவித்தார். (ச)

## ஆஸ்பத்திரி திருத்தவேலை ஆணையாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை திருத்தவேலைகள் நேற்று முதல் ஆஸ்பத்திரி வளவினுள் சிரமதானம் மூலம் நடைபெற்றுவருகின்றன.

இப்பணியில் யாழ். மாவட்டத் திரிசாரணர்கள், இந்து இளைஞர் பேரவைத் தொண்டர்கள், முறை சாராக்கல்விப் பிரிவு முதல் உதவி நிலைய உறுப்பினர்கள் ஈடுபட்டுவருகின்றார்கள்.

பாடசாலை மட்டத்தில் சாரணத் தலைவர்கள், திரிசாரணர்கள், சிரேஷ்ட சாரணர்கள் ஆகியோர் உதவி மாவட்ட ஆணையாளரைச் சந்தித்துத் தமது பங்களிப்புகளை நல்குமாறு யாழ். மாவட்ட ஆணையாளர் திரு: அ. சுப்பிரமணியம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (க)

## வர்த்தக நிலையங்களுக்கு புலிகள் கோரிக்கை

(கொழும்புதுறை)

தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி சகல தனியார், பல நோக்குக் கூட்டுறவுச் சங்க வர்த்தக உரிமையாளர்களுக்கும் அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது.

சகல விற்பனை நிலையங்களிலும் பாவனையாளர்களின் நன்மை கருதி அனைத்து உணவுப் பொருட்களினதும் விலைப்பட்டியல்கள் தெளிவாக எழுதிப் பார்வைக்கு வைக்க வேண்டும்.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் அத்தியாவசிய சேவைகள் குழு அரிசிக்கு நிர்ணயித்த கட்டுப்பாட்டு விலைகளையே பின்பற்றல்வேண்டும். விலைகள் விபரம் வருமாறு:-

ஒரு கிலோ புழுங்கல் தீட்டிய பச்சை அரிசி 25 ரூபா, ஒரு கிலோ மற்றைய ரக அரிசி 23 ரூபா, ஒரு கொத்து புழுங்கல் தீட்டிய பச்சை அரிசி 28 50 சதம். ஒரு கொத்து மற்றைய ரக அரிசி ரூபா 26 25 சதம்.

இந்த விலைகளை பின்பற்றத் தவறும் பட்சத்தில் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். மாவட்ட விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அறிவித்துள்ளது.

## சங்கிலி யாருடையது?

(நாவற்குழி)

சாவகச்சேரி சந்தைப் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற குண்டு வீச்சு சம்பவத்தின்போது தவறவிடப்பட்டு அனாதரவாகக் காணப்பட்ட தங்கச்சங்கிலியொன்றுமீசாலையைச் சேர்ந்த இளைஞர் ஒருவரால் கண்டெடுக்கப்பட்டு விடுதலைப் புலிகளின் சாவகச்சேரி பிரதேசப் பொறுப்பாளர் திரு சோமஸிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

தங்கச் சங்கிலியைத் தவறவிட்டவர் தகுந்த அடையாளம் காட்டி மீசாலையில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் சாவகச்சே[ரி] பிரதேசக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (107)

## தெங்குபனம்பொருள் சங்க உற்பத்தி பொருட்கள்சேதம்

(காங்கேசன்துறை)

விமானத் தாக்குதலினால் தெல்லிப்பழை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கத்தின் பல லட்சரூபா பெறுமதியான உடைமைகள் உற்பத்திப் பொருட்கள்சேதமுற்றும்அழிந்தும்விட்டதாகதெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சங்கத்தின் சேந்தாங்குளம் கள் அடைக்குள் தொழிற்சாலையே பொம்மர் தாக்குதலால் சேதமுற்றுள்ளது. சுட்டமட்டையில் இயங்கிய பனங்கட்டித்தொழிற்சாலை ஷெல் தாக்குதலால் சேதமுற்றுள்ளது. தெல்லிப்பழை கற்பகம் விற்பனை நிலையமும் சேதமுற்றுள்ளது. (86)

# ஜே.வி.பி.யை அடக்கியதுபோல் புலிகளை நினைக்கவேண்டாம்"

## சிறிமா அரசுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

தென்பகுதியில் ஜே. வி. பி. யை அடக்கியது போல் வடக்கு-கிழக்கில் விடுதலைப் புலிகளை அடக்கலாமென நினைப்பது ஒரு காலமும் சாத்தியப்படாதென எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது தொடர்பாக நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தின் போது உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் பேசுகையில்;

ஜே. வி பி.யை விட விடுதலைப் புலிகள் பல மடங்கு பலமுள்ளவர்கள். இதனை கடந்த கால சம்பவங்களே உறுதிப்படுத்துகின்றன; ஜே. வி. பி. யைப் போல சுலபமாக இவர்களை அடக்கிவிடமுடியாது.

தென்பகுதியில் தொடர்ந்தும் சிங்களவர் கடத்தப்படுவதும், காணமல் போவதும் அதிகரித்துள்ளது. இதனைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அங்கு தெரிவித்தார்.

இதற்கிடையில் பாராளுமன்றத்தில் பேசிய பல எம். பி.க்கள் வடக்கு-கிழக்கு பிரச்சனையை உடனடியாகத் தீர்க்க அரசு விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை நடாத்த வேண்டுமென்றும் கோரியுள்ளன. (சி)

# "மனச்சாட்சிப்படி நடந்தால் சிங் அரசு கவிழாது"

## - பொம்மை

(புதுடில்லி)

பிரதமர் வி. பி. சிங் தலைமையிலான தேசிய முன்னணி உறுப்பினர்களும், தோழமைக் கட்சிகளும் மனச்சாட்சிப்படி வாக்களிப்பார்களேயானால் நாடாளுமன்றில் எமது கட்சியின் பெரும்பான்மைப் பலம் நிரூபிக்கப்படும். எந்த ஒரு கட்சியுடனும் பேரம்பேசும் எண்ணம் எமக்குக் கிடையாது.''

இவ்வாறு ஜனதா தள் கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பொம்மை பிரதமர் திரு. வி. பி. சிங்கின் தற்போதைய நிலைப்பாடு குறித்துச் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

திரு. வி. பி. சிங் நாடாளுமன்றில் தமது கட்சியின் பெரும்பான்மையை நிரூபிக்க கால அவகாசம் கோருவது பாரதீய ஜனதாக் கட்சி உறுப்பினர்களின் மனத்தை மாற்றுவதற்குமேற்கொள்ளப்பட்ட ஒரு தந்திரோபாயமே என்று இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் ஏற்கனவே தெரிவித்த கூற்றை மறுக்கும் வகையிலேயே திரு. பொம்மையின் கூற்று அமைவதாக அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

மேலும் தமது பதவியை ராஜினுமா செய்த துணைப் பிரதமர் தேவிலால் வி. பி. சிங் அரசுக்கு தமது முழு ஆதரவை தெரிவிப்பதாக முன்பு கூறியபோதிலும் அவரது போக்கில் தற்போது மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (க)

## தாயும் மகளும் வெற்றி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பொதுத்தேர்தலில் போட்டியிட்ட பெண்களில் பெனுஸிர் பூட்டோவும் அவரது தாயாரும் வெற்றி பெற்றுள்ளனர். இதுவரை உலகம்முழுவதும் நடைபெற்ற பொதுத்தேர்தல்களில். பாராளுமன்றத்துக்கு தாயும் மகளும் மட்டும் தெரிவுசெய்யப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

இது கின்னஸ் சாதனையில் அடுத்தாண்டு இடம்பெறவுள்ளது. இருவரும் பெரும்பான்மையான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளனர். (ச)

## வளைகுடாவிற்கு மேலதிக

# அமெரிக்க படைகள் விரைவு

## ஈராக்கும் தயார் நிலையில்

(வாஷிங்டன்)

வளைகுடாப் பகுதிக்கு அமெரிக்கா மேலதிகமாக 10,000 படைவீரர்களையும், அதிநவீன டாங்கிகளையும், பீரங்கிப் படைப்பிரிவுகளையும் யுத்தக் கப்பல்கள் மூலம் அனுப்பியுள்ளது.

இதையடுத்து வளைகுடாவில் எவ்வேளையிலும் கடும்யுத்தம் எழக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகரித்துள்ளதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர். வளைகுடாவில் இதுவரை சுமார் இருபதாயிரம் படைகளை நிறுத்தியிருந்த அமெரிக்கா நேற்றுமுன்தினம் மேலதிகமாக பத்தாயிரம் துருப்புகளை அனுப்பியது.

அமெரிக்காவின் இந்தநடவடிக்கையை அடுத்து ஈராக் தனது படைகளை தயார் நிலையிலிருக்குமாறு உத்தரவிட்டுள்ளது. சகல படைப்பிரிவுகளும் எந்நேரமும் எதனையும் சமாளிக்கும் விதத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும் ஈராக் தெரிவித்துள்வது.

யுத்தம் ஒன்றில் ஈடுபட அமெரிக்கா முனையுமானல் ஈராக்கிலும், குவைத்திலும் பணயக்கைதிகளாக உள்ள ஆயிரக்கணக்கான வெளிநாட்டவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகுமென்றும் எச்சரித்துள்ளது. (சி)

# சிங் அரசு கவிழ்ந்தால் பல மாநிலங்களில் தேர்தல்?

(யுதுடில்லி)

இந்தியாவில் நவம்பர் 7ம் திகதி மிக முக்கிய நாளாகவே கருதப்படுகிறது. அன்றைய நம்பிக்கை வாக்கெடுப்பில் திரு. சிங் அரசு கவிழும் நிலை ஏற்பட்டால் பல மாநிலங்களிலும் சட்டசபை தேர்தல்கள் மீள நடைபெறும் நிலை ஏற்படும்.

வடக்கே பாரதீய ஜனதா கட்சியும், ஜனதா தள்ளும் கூட்டாக அரசமைத்துள்ள மூன்று மாநிலங்களில் ஒன்றுக்கொன்று தத்தமது ஆதரவை வாபஸ் பெற்றுள்ளதையடுத்து ஆட்சி கவிழும் நிலை ஏற்பட்டுள்ளது.

ராஜஸ்தான், குஜராத், மத்திய பிரதேசத்தில் மேற்படி சிக்கல்நிலை ஏற்பட்டுள்ளது. மத்தியில் ஆட்சியை மீண்டும் இந்திரா காங்கிரஸ் கைப்பற்றுமானல் பல மாநிலங்களில் புதிய தேர்தல்கள் நடைபெறும் எனவும் எதிர்பார்க்கப்படுவதாகவும் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டிலும் மாநில அரசு கலைக்கப்பட்டு புதிய தேர்தல்கள் நடைபெறும் வாய்ப்புகள் அதிகரித்துள்ளதாகவும் அவதானிகள் கருதுகின்றனர். (சி)

## யாழ். பதிவாளர் அலுவலகத்தில்

# 25,000 விண்ணப்பங்கள் தேங்கிக்கிடக்கின்றன

(கொழும்புத்துறை)

யாழ். செயலகத்திலுள்ள யாழ். மாவட்ட மேலதிகப்பதிவாளர் அலுவலகத்தில்பிறப்பு. இறப்பு விவாகப்பத்திரங்களை பெறுவதற்கான சுமார் 2,500 விண்ணப்பங்கள்தேங்கிக்கிடக்கின்றன.

இருந்தும் தற்போது வட பகுதி மின்சாரம்இன்மையால் போட்டோப்பிரதி எடுக்கும் இயந்திரத்தை இயக்க முடியாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இவ் அலுவலகத்துக்குத் தேவையான பிறப்பு,இறப்பு, விவாகச் சான்றிதழ்களை வழங்கக் கூடிய கையெழுத்துப் பிரதிகளுக்கான புத்தகங்கள் யாவும் கொழும்புத்தலைமைக் காரியாலயத்திலிருந்து எடுக்க முடியாத நிலையிலுள்ளது.

இக்காரியாலயத்திற்கு வடக்குக்கிழக்கு மாகாணசபையால் நியமனம் செய்யப்பட்ட பதினைந்து எழுதுவினைஞர்கள் அண்மையில் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இதன் காரணமாக மேலும் இக்காரியாலயத்தில் ஊழியர் பற்றுக்குறையினல் வேலைகள் ஸ்தம்பித மடையலாமென இக்காரியாலய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## கடற்றொழில் விரிவாக்க

# ஊழியருக்கு 4 மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை

(கொழும்புத்துறை)

கொழும்பில் தலைமைக்காரியாலயத்தைக்கொண்டுசெயற்பட்டுவரும் கடற்றொழில் விரிவாக்க அலுவலக ஊழியர்களுக்கு கடந்த நான்கு மாதங்களாக ஊதியம் வழங்கப்படவில்லை என யாழ். பிராந்திய பணிமனையைச்சேர்ந்த ஊழியர் ஒருவர் எமது நிருபருக்குத் தெரிவித்துள்ளார்

கடந்த நான்கு மாதங்களாக வேதனமும் இன்றுவரை தலைமை அலுவலகத்திலிருந்து கிடைக்காததால் இந்தஅலுவலகத்தைச் சேர்ந்த ஊழியர்கள் பெரும் கஷ்டத்தின் மத்தியில் இருப்பதாகக் கூறியுள்ளார்.

## திருமலையில்

# இந்துக்கள் வழிபட அனுமதி மறுப்பு

(கொழும்புத்துறை)

திருகோணமலை நகரின் மத்தியில் உள்ள வரலாற்றுப்புகழ் மிக்க அருள்மிகு சிவன் கோயிலுக்கு வழிபடச்சென்ற இந்துக்களுக்கு ஸ்ரீலங்கா இராணுவத்தால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

வழிபடச்சென்ற மக்கள் இந்த மறுப்புக்கான காரணத்தைக்கேட்டபோது கோயிலுக்குள் மிதிவெடி புதைத்து விட்டோம். விரும்பினல் போய் வழிபடுங்கள் என்று இராணுவத்தரப்பில் பதில் அளிக்கப்பட்டதாம். இத்தகவலை திருமலையில் இருந்து வந்த அகதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## தென்னங்கள்ளில் சீனி உற்பத்தி

(காங்கேசன்துறை)

உள்ளூர் சீனி உற்பத்திற்கு தென்னங்கள்ளையும் உபயோகிக்க பரீட்சார்த்தமாக முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக உள்ளூரில் சீனி உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. இதற்காக ஏற்கனவே பனங்கள்ளிலிருந்து பதநீர் தயாரிக்கப்பட்டு சீனி உற்பத்திக்கு அது உபயோகிக்கப்பட்டு வருகின்றது.

தற்போது தென்னங்கள்ளிலிருந்தும் பதநீர் தயாரிக்கப்பட்டு பாணியாக காய்ச்சி சீனி உற்பத்திக்கு பயன்படுத்த பரீட்சார்த்தமாக முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# இராணுவ நடவடிக்கையால் 50,000 மீனவர் பாதிப்பு

(கொழும்புத்துறை)

யாழ். குடாநாட்டின் கடற்கரையோரபகுதிகளில் ஸ்ரீலங்கா கடற்படை இராணுவத்தினரின் போர் நடவடிக்கைகளினல் கடலையே நம்பியிருக்கும் கடல் தொழிலாளர்கள் ஐம்பதினுயிரத்திற்கும் மேற்பட்டோர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்

தொடர்ந்தும் ஸ்ரீலங்கா இராணுவ, கடற்படையினர் மீன்பிடித்தொழிலைத் திட்டமிட்டு அழித்து வருவதும், கரையோரக்கிராமங்களை நோக்கிப் பீரங்கிப்படகுகள் மூலம் தாக்கியும் மீன்பிடிப் படகுகளை அழித்துவருவதும் தெரிந்ததே.

குறிப்பாக தீவுப் பகுதியிலும் வலிகாமம் வடக்கு பகுதியிலும் தொடர்ந்தும் இடம்பெற்றுவரும் இராணுவ நடவடிக்கையால் கடற்றொழிலாளர் சொல்லொணு துயரங்களை அடைந்து வருகிறார்கள்.

## இராசி பலன்

சனிக்கிழமை

27 - 10 - 1990

அட்டமி மு. ப. 10-32 வரை திருவோணம் பி. இ. 1. 10 வரை மரணயோகம் ராகுகாலம் காலை 9-09 முதல் 10-32 வரை: நல்லநேரம் 3-03 முதல் மாலை 4-32 வரை.

மேடம்: தொழில்பாராட்டு குடும்ப மகிழ்ச்சி, எண்ணம் நிறைவேறும். பயணங்கள் பலிதமாகும்.

இடபம்: வீண் சஞ்சலம், தொல்லை, குடும்பக்கவலை, தொழில் குறைவு, அகால போஜனம்.

மிதுனம்: கருத்து மோதல்: அன்னையர் தொல்லை, பணச் செலவு, மனக்குமுறல், தொழில் நஸ்டம்.

கடகம்: மனமகிழ்ச்சி, தொழில் பாராட்டு, அயலவர் சினேகம், தாய்வழிநினைவு, ஆலயதரிசனம்.

சிங்கம்; பகைவர்கள் தொல்லை, தொழில் முயற்சி, பெண் நேசம் தூரத்துச் செய்தி.

கன்னி: புத்திரர் கவலை, வாழ்க்கைப் போராட்டம், கடன்படல், அவமதிப்பு.

துலாம்: கைப்பொருள் தவறுதல், தகாதநட்பு, வீட்டில் மனவேதனை, அந்நியவாசம்.

விருச்சிகம்: எதிர் பாராத உதவி, காரிய பலிதம். பணவரவு, பொதுப்பணி; நன் மதிப்பு.

தனுசு; குடும்பகலகம், வைத்தியசெலவு, வீண்யோசனை, தொழில் பாதிப்பு.

மகரம்; அறிஞர் சந்திப்பு, தொழில்லாபம், குடும்பத்தில் குதூகலம், சகோதர உதவி.

கும்பம்: ஏமாற்றம், மனையாள் துன்பம், தொழில் குறைவு, கண்ணியகுறைவு, மனச்சுமை.

மீனம்: முயற்சி பலிதம். பணவரவு, மனமாற்றம், குடும்ப ஒற்றுமை. வெளியூர் பயணம்.

ஜோஸ்யர்.

## இயங்காதிருக்கும்
# சனசமூக நிலையங்களை கலைக்க
## உதவி ஆணையாளர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

''யாழ். மாவட்டத்தில் செயல்படாதிருக்கும் சனசமூக நிலையங்கள் இரு வாரங்களில் கலைக்கப்படும் என்று பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா தெரிவித்தார்.''

சனசமூகநிலையங்களின் புனரமைப்புப் பற்றிய கலந்துரையாடல் யாழ். பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினுர்.

திரு. டிவகலாலா அங்கு பேசுகையில் கூறியதாவது; ''யாழ் மாவட்டத்தில் 827 சனசமூக நிலையங்கள் இருக்கின்றன. இவற்றில் எத்தனை சனசமூக நிலையங்கள் இயங்குகின்றன என்பது கேள்விக் குறியாகவுள்ளது. எனவே இயங்காத நிலையங்கள் யாவும் உடனடியாகக் கலைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

''சாதிக்கொன்ருகவும், சமயத்திற்கொன்ருவும் பல சனசமூக நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

''இவை யாவும் புனரமைப்புச் செய்யப்பட்டு ஒரு கிராம சேவையாளர் பிரிவிற்கு ஒரு சனசமூக நிலையம் என்ற அடிப்படையில் பதிவு செய்யப்படும்'' (து)

---

## மாவீரர்தின கலந்துரையாடல்

மாவீரர் தினத்தையொட்டி முக்கிய முடிவினை எடுப்பதற்காக கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளரும், கொத்தணி அதிபர்கள், பாடசாலை அதிபர்களையும், பின்வரும் திகதிகளில் குறிப்பிட்ட இடத்திற்கு தவருது சமுகம் தருமாறு மாவீரர் நிர்வாகச் செயலகப் பொறுப்பாளரும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மாணவர் இயக்கமும், மாதிரி நிர்வாகச் செயலகமும் கேட்டுள்ளன.

**28-10-1990 ஞாயிற்றுக்கிழமை**

வடமராட்சிக் கோட்டம்: மு. ப. 9 மணிக்கு யா/வடஇந்து மகளிர் கல்லூரி பருத்தித்துறை

பண்டத்தரிப்புக் கோட்டம்: பி. ப. 3 மணிக்கு யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு

**29-10-1990 திங்கட்கிழமை**

யாழ் கல்விக்கோட்டம்: மு. ப. 9 மணிக்கு யா/கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்

மருதனுமடக் கோட்டம்: பி. ப. 3 மணிக்கு யா/இராமநாதன் கல்லூரி மண்டபம், மருதனுமடம்.

**விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்**
**தலைமைச் செயலகம்**

---

# முல்லையில்விதைநெல்லுக்கு பலத்த தட்டுப்பாடு

(மாங்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் காலபோக விதை நெல்லுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது.

நெல் விதைப்பு ஆரம்பமாகும் இக்காலகட்டத்தில் குறுகிய காலத்தில் நல்ல விதைப்பைத் தரவல்ல விதை நெல் இனங்கள் பி ஜி. 34-6 மற்றும் 500-1 ஆகியவற்றைப் பெறமுடியாது விவசாயிகள் திண்டாடுகின்றனர்.

கடந்த காலங்களில் இந்த விதைநெல் ரகங்கள் கமநல சேவை நிலையங்கள் ஊடாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. (150)

---

யாழ்.
## வர்த்த சங்க கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வர்த்தக சங்க நிர்வாக சபைக் கூட்டம் இம் மாதம் 29-ம் திகதி காலை 9 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறவிருப்பதாகச் சங்கச் செயலாளர் திரு. இ. நமசிவாயம் தெரிவித்துள்ளார். முக்கிய விடயங்கள் பற்றி ஆலோசிக்கப்பட இருப்பதால் சகல உறுப்பினர்களையும் தவருது சமுகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

---

## விரிவுரைகள் ஆரம்பிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் சகல விரிவுரைகளும் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் இது சம்பந்தமாக கற்கை நெறியினை மேற்கொள்ளும் சகல பீட மாணவர்களையும் நாளை 28 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்றுகாலை பத்து மணியளவில் யாழ் பிராந்திய நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு மாணவர் நலன்புரிச்சங்கத்தினர் கேட்டுள்ளனர். (153)

---

விமானத் தாக்குதலினுல்
# ஏற்றுமதி உற்பத்தி கம்பனி இயந்திரங்கள் சேதம்!

(நாவற்குழி)

சரசாலையில் நடந்த பொம்மர் தாக்குதலினுல் சரசாலை, பருத்தித்துறை வீதியிலுள்ளசாவகச்சேரி ஏற்றுமதி உற்பத்திக் கிராம மக்கள் கம்பனியின்லட்சம் ரூபாபெறுமதியான இயந்திரங்களும் சேதமுற்றுள்ளன.

இங்கு கடமையாற்றும் சுமார் முப்பது ஊழியர்கள் அலுவலகத்திலிருந்தும் வெளியே ஓடியதால் தெய்வாதீனமாக உயிர்தப்பினர் என்று கம்பனி முகாமையாளர் திருமதி இராஜேஸ்வரி துரைச்சாமி தெரிவித்தார்.

எஸ். மாசிலாமணி, பொன்னையா, க. கிருபாகரன் ஆகியோரின் வீடுகளும் சேதமடைந்துள்ளன' நான்கு ஆடுகள் பலியாகின. (107)

---

## காணிப்பதிவக ஊழியருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட காணிபதிவகம், மாவட்ட மேலதிக பதிவாளர் அலுவலகம் ஆகியனவற்றைச் சேர்ந்த சகல ஊழியர்களையும்திங்கட்கிழமைதொடக்கம்தங்கள் அலுவலகங்களுக்கு தவருது சமுகமளிக்குமாறு யாழ் மாவட்ட மேலதிக பதிவாளர் திரு. ஜே. என். போர்மன் அறிவித்துள்ளார். [153]

---

உலர்
## உணவு அனுமதி அட்டைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு உலர் உணவு விநியோகத்துக்கான அனுமதி அட்டைகள் வெகுவிரைவில் வழங்கப்படவிருக்கிறது.

உதவி அரசாங்க அதிபர்கள் இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு ''அ'', ''உ'' அனுமதி அட்டைகளை வழங்கவிருக்கிருர்கள்.

''இ'' அட்டையை வழங்கும் போது கிராமசேவை அலுவலர்கள் மிகவும் கவனமாக நடவடிக்கைகளை எடுக்கும்படி பணிக்கப்படவுள்ளனர் வெளிமாவட்டத்திலிருந்து யாழ். மாவட்டத்திற்கு இடம் பெயர்ந்தவர்களுக்கான பட்டியல்களையும் தயாரிக்கவிருக்கிருர்கள். (153)

---

## நீலகிரியில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வெள்ளத்தால் மூழ்கடிக்கப்பட்டோரின் உறவினர்களுக்கு, துயர்துடைப்பு நிதி வழங்க 5 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணநிதி அறிவித்துள்ளார். [அ]

---

## வடமராட்சி ஷெல் உசனில் வெடித்தது

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்குப்பகுதி கடற்பகுதியில் நிற்கும் ஸ்ரீலங்கா கடற்படையின் படகிலிருந்து நேற்று முன்தினம் காலை ஏவப்பட்ட பீரங்கி 'ஷெல்' மிருசுவில் உசன் வயல் வெளியில் வந்து வீழ்ந்து வெடித்தது. (153)

---

மாவீரர் மயானத்தில்
# வீர மரணமடைந்த புலிகளுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம், கட்டுவன், குரும்பசிட்டிப் பகுதிகளில் சிங்கள இராணுவத்துடன் நேரடிமோதலில் வீரமரணமடைந்த மேஜர் ஹென்றி, வீரவேங்கைகளான சேரன், திலிப், வெற்றி ஆகியோரின் பூதவுடல்கள் நேற்று மாலை கோப்பாயிலுள்ள மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

பாஷையூரைச் சேர்ந்த மேஜர் ஹென்றியின் (ஏகாம்பரம் பன்னீர்ச்செல்வன்) பூதவுடல் பாஷையூர் கிராம முன்னேற்றச் சங்க சனசமூக நிலைய மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்பு மாலைகோப்பாய்க்குஎடுத்துச் செல்லப்பட்டது.

இதேபோல் வீரவேங்கைகளான சேரன் (பெருமாள் நாகேந்திரம், மானிப்பாய்வீதி யாழ்ப்பாணம்), திலீப் (அப்புக்குட்டி வரதன், ஊரெழு), வெற்றி (சோமசுந்தரம் சுதாகரன், சுழிபுரம்) ஆகியோரின் பூதவுடல்கள் அவர்களின் இல்லங்களில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை கோப்பாய் மாவீரர் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

மேற்படி மயானத்தில் வீரவேங்கைகளின் பூதவுடல்களுக்கு பெருந்திரளான மக்கள் அஞ்சலி செலுத்தியதுடன், அரியாலை விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர் பசீனின் அஞ்சலி உரையுடன், பெற்ருேரும் சகோதரர்களும் சிதைகளுக்கு தீமூட்டினர். (வி)

---

## பண்ணை தாம்போதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டிருந்த மிதிவெடிகள் அகற்றப்பட்டு வீதிகள் திருத்தும் வேலைகளும் நடைபெறுகின்றன. தீவுப்பகுதி மக்களின் நன்மை கருதி திருத்தப்பட்டு வரும் இவ்வீதி மிக விரைவில் திறந்துவிடப்படவிருப்பதால் அனைத்து மக்களும் ஒன்றுபட்டு வீதிகளை திருத்தும்பணியில் உதவுமாறு விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி புங்குடுதீவு பிரதேசப் பொறுப்பாளர் திரு. மங்களேஸ் கேட்டுள்ளார். (101)

---

## கிரிக்கெட்
## பாகிஸ்தான்-102

(பாகிஸ்தான்)

பாகிஸ்தானுக்கும், நியூஸிலாந்துக்குமிடையில், நேற்று ஆரம்பமான 3-வதும், இறுதிக் கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் முதல்நாள் ஆட்டத்தில், பாகிஸ்தான் முதல் இன்னிங்ஸில் மொத்தம் 102 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

நியூஸிலாந்தின் நடுத்தரப் பந்து வீச்சாளர் பங்கிஸ் 52 ஓட்டங்களைக் கொடுத்து ஏழு விக்கெட்டுகளை வீழ்த்தினுர். (வி)

---

## வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளுக்கும் சிங்கள இராணுவத்தினருக்கும் இடையில் மாவட்டபுரத்தில் நடந்த மோதலில் புலிகள் தரப்பில் வீரவேங்கை மகான் (சுதாகரன் பூதர்மடம் கோப்பாய்] வீரமரணமடைந்தார் (வி)

---

## காலம் இழப்பு

## கால் இழப்பு

(மட்டுநகர்)

பெரியகல்லாறுப் பகுதியில் நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகள் வைத்த மிதிவெடிகளில் சிக்கிய இராணுவத்தினர் இருவர் கால்களை இழந்தனர். (வி)

---

## 3ம் கட்ட இலவச

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற உணவு விநியோகம் சம்பந்தமானகூட்டத்தில் மேற்கண்ட கால எல்லை நீடிப்பு முடிவு எடுக்கப்பட்டது.

தெல்லிப்பளை, உடுவில், சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள ப. நோ. கூ. சங்கங்களின் கிளைகளில் மேற்கூறப்பட்ட உணவு விநியோகங்கள் முற்றுப் பெருத காரணத்தால் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் 5ம் திகதி காலை நடைபெறவிருக்கும் கூட்டத்தில் 4ம் கட்ட இலவச நிவாரணம், அனுமதி அட்டைகள் ஆகியனபற்றி ஆராயப்படவுள்ளன, (153)

---

## பாதிக்கப்பட்ட

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வழங்கப்படும்.

இச்சுற்று நிருபத்தின்படி வவுனியா, முல்லைத்தீவு, மன்னுர், கிளிநொச்சி ஆகியபகுதிகளில் உள்ள மக்கள் தற்போது நிவாரணங்களைப் பெற்று வருகின்ருர்கள்.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரை, வலி-வடக்கு பகுதியில் உள்ள மயிலிட்டி, ஊறணி, வசாவிளான், பலாலி மாவிட்டபுரம் மக்களும் யாழ் உதவி அரசாங்க அதிபர் பகுதி குருநகர், நாவாந்துறை தீவுப் பகுதியில் உள்ள மக்களும் இதன்மூலம் கூடுதலாகநன்மையடையக்கூடும் எனக்கூறப்படுகிறது.

மேற்படி நிவாரண வேலைகள் யாழ். செயலகத்தின் ஊழியர்களின் வருகை அதிகரித்ததும் துரிதப்படுத்தப்படுமென யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வி)

---

## பாநிலங்களின் அமைச்சர்கள் ராஜினுமா!

(புதுடில்லி)

பாரதீய ஜனதாக்கட்சியின் வேண்டுகோளையடுத்து ராஜஸ்தான், குஜராத் மாநில சட்டசபைகளின் அமைச்சர்கள் 10 பேர் தமது ராஜினுமாக் கடிதங்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

தேசிய முன்னணி அரசு பாராளுமன்றத்தில் தனது பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க நீடித்த கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகலாகவே மேற்படி இரு மாநிலசட்டசபை அமைச்சர்கள் கூட்டாக ராஜினுமா செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

---

## புலிகளின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ணுவத்தினர் படுகாயமடைந்துள்ளதாக புலிகள் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வி)

---

## விடுதலைப் புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மாணவர் அமைப்பு இவ்விலவசப்பாடசாலைகளை நடத்துகின்றது.

செல்வாபுரம், பாரதிபுரம் ஆகிய பின்தங்கிய கிராமங்களில் விடுதலைப் புலிகள் அமைப்பு ஆண்டு ஒன்று தொடக்கம் ஆண்டு ஒன்பது வரைக்குமான வகுப்புகளை ஆரம்பித்துள்ளது.

இதனுல் அப்பகுதி ஏழைப் பிள்ளைகள் கல்வியைத்தொடர வாய்ப்புஏற்பட்டுள்ளது. (150)

---

## படையினர் பின்வாங்கினர்

(ஆனையிறவு)

ஆனையிறவிலிருந்து கிளிநொச்சிநோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் மேற்கொண்டதில் இராணுவம் மீண்டும் முகாமுக்கு திரும்பிச் சென்றது. ஆயினும் இவர்கள் முகாமிலிருந்து பொதுமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான ஷெல் தாக்குதலை நடாத்தினர். (வி)

---

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு ஐப்பசி மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.